# நினைவில் நால்வர்

எஸ். எச். எம்
ஜெமீல்

இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TN/63

# நினைவில் நால்வர்

Aliyar Muzz-zammil
"RIZIYA MAHAL"
546A, 1ST CROSS STREET
SAINTHAMARUTHU-16 (E.P)
SHRI LANKA

அல்ஹாஜ்.
எஸ். எச். எம். ஜெமீல், எம். ஏ.

இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகம்
வெளியீடு : 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலாசிரியர் : அல்ஹாஜ். எஸ். எச். எம். ஜெமீல்,
பீ. ஏ. (பொருளியல் - விசேட);
கல்வி டிப்ளோமா; எம். ஏ.
ராஜாங்கச் செயலாளர், முஸ்லிம்
சமய, பண்பாட்டலுவல்கள்
ராஜாங்க அமைச்சு, இலங்கை

வெளியீடு : இஸ்லாமிய நூல் வெளியீட்டுப்
பணியகம், சாய்ந்தமருது, கல்முனை

அச்சு : பசிபிக் அச்சகம் (பி) லிமிரெட்
கொழும்பு - 13

முதற் பதிப்பு : 1993 மே 22

உரிமை : ஆசிரியருக்கு

அட்டை அமைப்பு : கலைவாதி கலீல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பான நினைவு தினப் பேச்சுக்கள்


பக்கம்

*சிறப்புரை* .......................................... 5

1. *எம். சி. சித்திலெவ்வை* .......................... 9

2. ஸேர். முஹம்மத் மாக்கன் மாக்கார் .......... 19

3. *கலாநிதி அல்ஹாஜ். ரி.பி. ஜாயா* ............... 27

4. *கலாநிதி அல்ஹாஜ். ஏ. எம். ஏ. அஸீஸ்*..... 35




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NINAIVIL NALVAR

AUTHOR : ALHAJ. S. H. M. JAMEEL,
B.A. (Econ - Sp); DipEd; M. A.
STATE SECRETARY, OFFICE OF THE MINISTER OF STATE FOR MUSLIM RELIGIOUS & CULTURAL AFFAIRS, SHRI LANKA

PUBLISHERS : ISLAMIC BOOK PUBLISHING CENTRE, SAINTHAMARUTHU, KALMUNAI

PRINTERS : THE PACIFIC PRESS (PVT) LTD, COLOMBO - 13

FIRST EDITION : 1993 MAY 22

COPYRIGHT : AUTHOR

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்புரை

"என் இறைவா! எனது அறிவைப் பெருக்கியருள்" என்று தன்னிடம் இறைஞ்சுமாறு நம்மை இறைவன் பணிக்கின்ற திருவசனம் புனித குர்ஆனில் உள்ளது. மற்றோரிடத்தில் "கற்றோரும், அற்றோரும் சமமாவாரா" என்ற வினாவையும் புனித குர்ஆன் எழுப்புகிறது. திருக்குர்ஆனின் முழுமையான நிரூபணமாகவே வாழ்ந்து ஓங்கிய எம்பெருமான் முஹம்மத் (ஸல்) அவர்களும் கல்வி அறிவைப் பெறுவது முஸ்லிம், ஆண், பெண் இருசாரார் மீதும் கட்டாயக்கடமை என்று வலியுறுத்தியதோடு பிறிதொரு ஹதீதின்படி "தான் வாழும் யுகத்தை நன்றாக அறிந்து கொண்டவனே வெற்றி பெறுவான்" எனவும் திருவுளமாகியுள்ளனர்.

இவற்றின் மூலம் கல்வி, கேள்விகளில் புலமை பெறுவது ஒரு முஸ்லிமுக்குத் தீர்க்கமான கடமையாகவும் இன்றியமையாப் பணியாகவும் இஸ்லாம் விதித்துள்ளதைப் புரிந்து கொள்ள முடியும். இந்த உந்துதலே முஸ்லிம்கள் ஆயகலைகள் அனைத்திலும் சிறந்தோங்கியதோடு 'பல்கலைக்கழகங்களின் தாய்' எனப் புகழ்பெற்ற ஆயிரம் ஆண்டு காலத்து அல் - அஸ்ஹறரையும் அதற்கும் ஓரிரு நூற்றாண்டுக்கு முந்திய அல் - கரவைனையும் உலகுக்கு அளிப்பதற்குக் காரணமாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும், பிற்காலத்தில் முஸ்லிம்களின் வீழ்ச்சி அவர்களது கல்வி ஆராய்ச்சிகளிலும் அவர்களைப் பின்தள்ளிப் போட்டது. அது ஒரு நீண்ட வரலாறு. அந்த வரலாற்றின் பரிதாபத்திற்குரிய ஓர் அத்தியாயம் தான் இலங்கை முஸ்லிம்களின் கல்விப் பின்னடைவு மாகும்.

இந்நிலையிலிருந்து முஸ்லிம்களின் வரலாற்றையும் பாரம்பரியப் பெருமைகளையும் சமீப காலத்தில் முன்னெடுத்துச் சென்று அவர்களது கீர்த்தியை நிலைநிறுத்திய சமுதாயவாதிகள் பலர் இருப்பினும் ஒரு சிலரே எமது நெஞ்சில் நீங்கா இடத்தைப் பற்றிப் பிடித்துள்ளனர்.

அந்த வகையில் ஒராபி பாஷா, அறிஞர் சித்தி லெவ்வை, வாப்பிச்சி மரைக்கார், ஐ. எல். எம். அப்துல் அஸீஸ், ஸேர். முஹம்மத் மாக்கன் மாக்கார், டாக்டர். டி. பி. ஜாயா, ஸேர். ராஸீக் பரீத், கேட் முதலியார் எம். எஸ். காரியப்பர், எ. எம். எ. அஸீஸ், டாக்டர். எம். சி. எம். கலீல், டாக்டர். பதியுத்தீன் மஹ்மூத் போன்றோர் சிலாகிக்கத் தக்கவர்களே.

இவர்களுள் நால்வரைப் பற்றிய இந்நூல் வருங்கால வையகத்தை வளம்படுத்தத் தோன்றிய நான்கு சிந்தனைச் செயல் வீரர்களின் சேவைகளை நயந்துரைக்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாப். எஸ். எச். எம். ஜெமீல் இத்தகைய நூலென்றை வெளியிடுவது பொருத்தமானது. ஏனெனில் அவருமே ஒரு கல்வியாளர்தான். கல்வித்துறையில் பல உயர் பதவிகளை வகித்து, இன்று எனது ராஜாங்க அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றும் ஜனாப். ஜெமீல் தனது சமுதாய மேம்பாட்டுக்காகத் தனது முழு உழைப்பையும் செலவிடும் ஒருவராவார். கடந்த மூன்று வருடங்களில் எனது அமைச்சு இருபது நூல்களை வெளியிட முடிந்ததென்றால் ஜனாப். ஜெமீலின் பங்களிப்பும் கணிசமானதாகும்.


எழுத்தாளர்களையும், கலைஞர்களையும் அரவணைத்து விருதுகள் வழங்கிக் கௌரவிப்பதோடு நூல் வெளியீடுகளை ஊக்குவித்து உற்சாகப்படுத்தலும் எனது அமைச்சின் பணியாகும். எனவே இதுபோன்ற நூல்கள் இன்னும் பல வெளிவர வேண்டுமென்பதே எனது ஆவலாகும்.

அல்ஹாஜ். ஏ. எச். எம். அஸ்வர், பா. உ.
முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள்
இராஜாங்க அமைச்சர்

34, மலே வீதி,
கொழும்பு - 2.
10. 05. 1993.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எம். சி. சித்திலெவ்வை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்.சி. சித்திலெவ்வை

முஹம்மதுக் காசிம் சித்தலெவ்வையின் சமகாலத்தவரான அ. காதிறுபாட்சா என்பவர் தமது 'தத்துவ பரகண்ட திக்கார கண்டனம்' எனும் சிறு நூலில் சித்திலெவ்வை அவர்களைப் பற்றிப் பின் வருமாறு கூறுகிறார்:

"பல பாஷைகளைப் பயின்று தெளிந்த நிபுணத்துவம் உடையவரும், தீன்நெறியறிவுகளை விளக்கிய தீபிகையொத்தவரும், தயை, பொறுமையாகிய மேன் குணாலயம் போன்றவரும், குபிர் மதசத்துரு, சங்கார வெற்றிமாலை பூண்டவரும், அட்டதிங்கெங்கினும் அரும்பெரும் பிரக்யாதி பெற்றவரும், மஹாசன சாதுக்கள் சபைகளிடத்தும் சாதுரிய சல்லாப உல்லாச வசன கெம்பீர சர்ச்சனரென மதிக்கப்பெற்ற கண்ணிய புருடரும் புண்ணிய சீலருமான கனம் சி.மு."

இவ்வாறு புகழ்ந்துரைக்கப்பட்ட சித்திலெவ்வை 1838 ஜூன் 11ஆம் திகதி கண்டியிற் பிறந்து, 1898 பெப்ரவரி 5ஆம் திகதி காலமானார். அறுபது வருடங்கள் இவ்வுலகில் வாழ்ந்த அவர் தமது காலத்துட் பெரும்பகுதியைக் கல்வி, சமய, சமூக சேவைகளிற் செலவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஹம்மது லெவ்வை சித்திலெவ்வை எனும் சட்டத்தரணியின் மகனான முஹம்மதுக் காசிம் தனது தந்தையாரின் பெயரான சித்திலெவ்வையையும் தம் பேரோடிணைத்து 'எம்.ஸி. சித்திலெவ்வை' எனப் புகழ் பெற்றார். சட்டத்தரணியாகத் தனது வாழ்க்கையை ஆரம்பித்த இவர், சிறிது காலம் அரசியலிலும் ஈடுபாடுடையவராயிருந்தார். இவ்வீடுபாட்டின் விளைவாகக் கண்டி முனிசிபல் சபையின் நாலாம் வட்டார அங்கத்தவராகச் சுமார் எட்டு வருடங்கள் கடமையாற்றினார். ஐந்து வட்டாரங்களைக் கொண்ட அம்முனிசிபல் சபையின் ஏனைய அங்கத்தினர் வர்னன் லாங்கன் பேர்க், எல். பீரிஸ், ஜே.பி. சிபெல், டபிள்யூ. குணதிலக்க என்போராவர். ஆயினும் 1882 இல் அப்பதவியிலிருந்து தாமாகவே விலகிக் கொண்டார். அதனால் அவரது முழு நேரமும் பத்திரிகை வெளியிடல்; நூல்களைப் பிரசுரித்தல்; கல்வி பற்றிய பிரசாரத்தில் ஈடுபடல்; பாடசாலைகளை ஸ்தாபித்து நிர்வகித்தல் என்பனவற்றிலேயே கழிந்தது.

சித்திலெவ்வை காலத்து இந்நாட்டு முஸ்லிம் சமுதாயத்தின் தேவையும் அதுவாகவேயிருந்தது. ஏனைய சமூகங்கள் விழிப்படைந்து கல்வித்துறையில் முன்னேறி வந்த வேளையிலும், முஸ்லிம்கள் அத்துறையில் மிகப் பின்தங்கியேயிருந்தனர். அரசினர் பாடசாலைகளிலாயிருந்துஞ்சரி, தனியார் பாடசாலை களிலாயிருந்துஞ்சரி கல்வி கற்ற முஸ்லிம் மாணவரின் தொகை 2%க்கும் குறைவாகவேயிருந்தது. உயர்கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளித்த கொழும்பு அகெடமியில் ஒரு முஸ்லிம் மாண வரேனும் கல்வி கற்கவில்லை. 1880 ஆம் ஆண்டளவில் முழு நாட்டிலும் இரண்டேயிரண்டு முஸ்லிம் ஆசிரியர்களேயிருந்தனர்.

இத்தகைய வரலாற்றுச் சூழ்நிலையிலேயே சித்திலெவ்வையின் கல்விப்பணி தொடங்குகின்றது. அத்துறையில் எவ்வித அக்கறையுமற்றிருந்த சமுதாயத்தைக் கல்வியின்பால் இழுத்தெடுப்பதற்கான அவரது முயற்சிகள் இந்நிலையிலேயே மேற்கொள்ளப் பட்டன.

இதற்கான அடிப்படைத் தேவை கல்வி பற்றிய பிரச்சாரமேயென உணர்ந்த சித்திலெவ்வை 'முஸ்லிம் நேசன்' பத்திரிகையை வெளியிடலானர். அவரது நாற்பத்தைந்தாவது வயதில் 1882 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 12 ஆம் திகதி 'முஸ்லிம் நேசனின்' முதற் பிரதி அவரது சொந்த அச்சகத்திலிருந்து வெளிவந்தது. அன்று தொட்டு 1889 ஆம் வருடம் மார்ச் மாதம் 6 ஆம் திகதி வரை ஏறக்குறைய ஆறு ஆண்டுகள் அப்பத்திரிகை வெளிவந்தது. இத்துறையில் எல்.எம். உதுமான், ஏ.ரீ. சம்சுதீன் ஆகிய இருவரும் இவருக்குப் பெரும் துணையாயிருந்தனர்.

இப்பத்திரிகையின் நோக்கத்தை அதன் முதலாவது இதழிற் பின்வருமாறு குறிப்பிட்டார்: "கல்வி என்பது பாஷைகளை வாசித்தறிதல் மாத்திரமல்ல; மன விரிவுக்கும், தெளிவிற்கும் பலவித அறிவு நூல்ளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்கு அறிவதாம். ஆனால் மேற்சொன்ன பிரயோசனமுள்ள நூல்கள் தமிழ்ப் பாஷையிலேயே மிகவும் சுருக்கமானபடியினாலே தமிழ்ப் பாஷையை மாத்திரம் தெரிந்தவர்கள் அவைகளை அறிந்து கொள்வதற்கு வழியில்லாதிருக்கிறது. ஆகையால் அறபுக் கிதாபுகளிலிருந்து அறிய வேண்டிய அறிவுகளையும், இங்கிலீஸ் முதலிய பாஷைகளின் கல்விகளையும் படித்தவர்களும், படியாதவர்களும், முதியவர்களும், இளைஞர்களும் , மற்றவர்களும் தங்கள் தங்கள் வேலை முயற்சிகளோடு வாசித்து அறிந்து கொள்ளும் படி உலமாக்கள், கல்விமான்கள் ஆகிய இவர்களுடைய உதவியைக் கொண்டு ஒரு பத்திரிகையைக் கிழமை தோறும் பிரசுரம் செய்ய விரும்பி இப்பத்திரிகைக்கு முஸ்லிம் நேசன் எனப் பெயரிட்டோம்."

தமிழில் சில பக்கங்களையும், ஆங்கிலத்தில் சில பக்கங்களையும் கொண்டு இப்பத்திரிகை தொடர்ந்து வெளிவந்தது. முதலாவது இதழின் ஆங்கில ஆசிரியர் தலையங்கத்திலும் கல்வியறிவின் மகிமையையே சித்திலெவ்வை பின்வருமாறு வலியுறுத்துகிறார்:

"நாம் ஒருங்கிணைந்து கல்விக் குறிக்கோளையடையும் வரை உழைக்க வேண்டிய காலம் வந்துவிட்டது. கல்வி என்பது எழுத, வாசிக்க அறிந்திருத்தல் மட்டுமல்ல; நன்கு கற்றுத் தேறுவதுமாகும். மனத்தினை அகலப்படுத்தி, நுண்புத்தியைக் கூர்மைப்படுத்துவது அதுவாகும். இதற்காகத் தமிழ் மட்டும் போதாது. அறபு, ஆங்கில மொழி நூல்களையும் நன்கு கற்றுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேறவேண்டும்." எனக் கூறிப் பிரபல தமிழ்ப் பாடலொன்றையும் மேற்கோள் காட்டினார்.

"வெள்ளத்தாலழியாது
வெந்தழலால் வேகாது வேந்தராலும்
கொள்ளத்தான் முடியாது
கொடுத்தாலும் நிறைவொழியக் குறைவில்லை
கள்ளர்க்கோ மிக வரிது
காவலுமோ மிக வெளிது
கல்வியென்னு முள்ளத்தே பொருளிருக்க
ஊரெங்கும் பொருள்தேடியலைகின்றாரே."

முஸ்லிம் நேசன் பத்திரிகையை இவ்வாறான நோக்கங்களுக்காக நடத்தியது போன்று ஆன்மீக வளர்ச்சிக்கான பத்திரிகையொன்றையும் அவர் வெளியிட்டார். 'ஞானதீபம்' எனும் பெயரோடு அது வெளிவந்தது. இதன் முதற் பிரதி 1892 ஆவணி முதலாம் திகதி பிரசுரிக்கப்பட்டுள்ளது. எனினும் இப்பத்திரிகை ஒரு வருடம் மட்டுமே வெளிவந்தது. போதிய சந்தாதாரர் சேராமையால் 1893 ஆவணி 1ஆம் திகதிய இதழுடன் நிறுத்தப்பட்டது.

பத்திரிகைகள் நடத்துவதோடு, நூல்களை எழுதுவதிலும், அவற்றைப் பிரசுரிப்பதிலும் சித்திலெவ்வை கவனஞ் செலுத்தினார். பின்வருவன அவரது நூல்களாகும்:

அசன்பேயுடைய கதை, ஹிதாயத்துல் காசிமிய்யா பிஷ்ஹீலில் சியாத்தில் அறபியா, அறபு - முதலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தகம், அறபு - இரண்டாம் புத்தகம், கிதாபுல் ஹிஸ்ஸத் (கணிதம் - முதலாம் புத்தகம்) , தமிழ் - முதலாம் புத்தகம், துஹ்பதுல் நகுவு (அறபு இலக்கணம்), அஸ்றாறுல் ஆலம் (உலக இரகசியம்), துருக்கி -கிரேக்க யுத்தம், அபூநுவாசின் கதை, சுறுதத்துஸ் ஸலாத்து.

இவற்றைவிட மேம்பட்டது சித்திலெவ்வையின் கல்விப்பணியாகும். முஸ்லிம்களுக்கான பாடசாலைகளை நிறுவுவதில் இந்நாட்டின் முன்னோடி சித்திலெவ்வையாவார். முஸ்லிம்களுக்கான கல்வித் திட்டங்களை வகுக்கும் பொழுது அக்காலத்தையக் கல்வி இயக்குநர் டாக்டர் கிரீன் என்பார் சித்திலெவ்வையின் யோசனைகளை எப்போதும் பெற்றுக் கொண்டார்.

கல்வி மேம்பாட்டுக்கு சித்திலெவ்வை பல வழிகளை மேற்கொண்டார். கல்வியின் அவசியத்தை வலியுறுத்திச் சொற்பொழிவுகள் நிகழ்த்தல்; முஸ்லிம் நேசன் பத்திரிகையிற் கட்டுரைகள் எழுதுதல்; தனது சொந்த அச்சகம் மூலம் பாடப்புத்தகங்களை வெளியிடல்; பாடசாலைகளை நிறுவுதலும், நிர்வகித்தலும்; அரசுக்கு ஆலோசனைகள் வழங்கல் என்பன அவர் கைக்கொண்ட வழிகளாகும்.

முஸ்லிம் ஆண்கள் மட்டுமல்ல, பெண்களும் கல்வி பெறல் வேண்டுமென்பதில் அவர் மிகவும் கரிசனை காட்டினார். இதற்காகக் கண்டியில் திருகோணமலை வீதியிற் பெண்பாடசாலையொன்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவினார். அவரது சகோதரி முத்துநாச்சியா இதன் தலைமையாசிரியையாகக் கடமையாற்றினார். அவரது மனைவியான செய்யதும்மாவும் இதன் வளர்ச்சிக்கு மிகவும் உதவினார். இப்பாடசாலையின் கிளையொன்று கண்டி கட்டுக்கலையில் இயங்கியது.

சித்திலெவ்வையின் சேவைகளின் உச்சநிலை கொழும்பு மருதானையில் முஸ்லிம்களுக்கெனத் தனியானவொரு பாடசாலை நிறுவியதேயாகும். 1891ஆம் ஆண்டில் ஒரு வெள்ளிக் கிழமை ஜும்ஆத் தொழுகைக்குப் பின் மருதானைப் பள்ளிவாசலில் மிக உருக்கமான சொற்பொழிவொன்றை நிகழ்த்தினார். கல்வியில் தமது சமுதாயம் பின்தங்கியிருப்பதையும், அதனாலேற்படும் தீமைகளையும் சுட்டிக்காட்டி, இவ்விழிநிலை உடன் நீக்கப்படல் வேண்டுமெனக் கூறி, அதற்கான வழிகளையும் எடுத்துக்கூறினார். இதன் உடனடிப் பலனாகவே கொழும்பு முஸ்லிம் கல்விச் சங்கம் 1891 இல் நிறுவப்பட்டது. இதன் முயற்சியினால் 1892 இல் மருதானை முஹம்மதிய ஆண்கள் பாடசாலை நிறுவப்பட்டு அது மத்ரஸத்துஸ் ஸாஹிராவாக மலர்ந்து கொழும்பு ஸாஹிராக் கல்லூரியாகப் பரிணமித்தது. இவரது இத்தகைய பணிகளில் எ. எம். வாப்பிச்சி மரைக்கார், ஒறபிப் பாஷா, ஐ. எல். எம். அப்துல் அஸீஸ் என்போரின் பங்கும் குறிப்பிடத்தக்கன.

இவ்வாறு 19ஆம் நூற்றாண்டின் கடைசித் தசாப்தங்களில் சித்திலெவ்வை முஸ்லிம்களிடையே கல்வி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவு மலர்ச்சியேற்படப் பாடுபட்டதன் விளைவாகவே, இருபதாம் நூற்றாண்டு ஆரம்பத்தில் இந்நாட்டு முஸ்லிம்கள் பலன் பெறலாயினர். அன்னாரது சேவை எமக்கும், எமது வருங்காலச் சந்ததியினருக்கும் சிறப்பான வழிகாட்டலாகத் திகழ்கின்றது.

1990 பெப்ரவரி 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Aliyar Muzzammil
"RIHZIYA MAHAL"
546A, 1ST CROSS STREET
SAINTHAMARUTHU-16 (E.P)
SHRI LANKA



சேர். முஹம்மத் மாக்கன் மாக்கார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸேர். முஹம்மத் மாக்கன் மாக்கார்

**ஸேர்**.முஹம்மத் மாக்கன் மாக்கார், 1879 செப்டம்பர் 7ஆம் திகதி காலி கோட்டையிலுள்ள சேர்ச் வீதி 47ஆம் இலக்க இல்லத்திற் பிறந்தார்.

இவரது தந்தை புகழ்பெற்ற மாணிக்கக்கல் வர்த்தகரான ஓ.எல்.எம். மாக்கன் மாக்கார் என்பவராவார். உதுமாலெப்பை மரிக்கார் மாக்கன் மாக்கார் எனும் முழுப்பெயரைக் கொண்ட அவர், தனது இரத்தினக்கல், நகை வர்த்தகத்தை 1860 இல் காலியில் ஆரம்பித்தார். பின்னர் இலங்கையின் தலைநகராகக் கொழும்பு பிரபல்யமடைந்த பொழுது, 1892 இல் தனது நிறுவ னத்தைக் கொழும்புக்கு மாற்றினார்.

ஓ.எல்.எம். மாக்கன் மாக்கார் எனும் இந்நிறுவனம், காலக்கிரமத்தில் சர்வதேப் புகழை அடைந்தது. லண்டன், பரிஸ் ஆகியவிடங்களில் நடைபெறும் இரத்தினக்கல் சந்தைகளில் இது கிரமமாகப் பங்கு பற்றியது. பிரித்தானிய மன்னர் குடும்பத்தினரும் பல பிரபுக்களும் இதன் வாடிக்கையாளராயிருந்தனர். குறிப்பாக, ஏழாவது எட்வர்ட் மன்னர், ஐந்தாம் ஜோர்ஜ் மன்னர் என்பவர்களோடு, ஜப்பானிய அரசரும் அடிக்கடி தமக்குத் தேவையான இரத்தினக் கற்களையும், நகைகளையும் இவர்களிடமே பெற்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேசப் புகழ்பெற்ற 105 கரட் வைடூரியம், 500 கரட் BLUE GIANT OF THE ORIENT எனும் நீல மாணிக்கக்கல்; 225 கரட் WONDER STAR OF ASIA என்பன ஓ.எல்.எம்.மாக்கன் மாக்கார் வசமிருந்த அரிய பொக்கிஷங்களாகும்.

இத்தகைய சர்வதேசப் பிரபல்யம் பெற்ற வியாபார நிறுவன உரிமையாளரொருவரின் மகனாகவே ஸேர். முஹம்மத் மாக்கன் மாக்கார் பிறந்தார். அவரையும் சேர்த்து அக்குடும்பத்தில் மொத்தம் 13 பிள்ளைகள். ஆண்கள் 6, பெண்கள் 7. ஆண்களில் இருவர் இளவயதில் இறந்து விட்டனர். ஏனைய நால்வருமான முஹம்மத், சம்சுதீன், அப்துல் வதூத், முஹம்மது ஸாலிஹ் என்போர் தமது தந்தையாரின் வர்த்தக நிறுவனத்தை மேன்மேலும் புகழடையச் செய்தனர். எகிப்தின் தலைநகரான கெய்ரோவிலுள்ள ஷெப்பர்ட் ஹோட்டல்; கொண்டினென்டல் சவோய் ஹோட்டல்; செமிராமிஸ் ஹோட்டல்; ஜெருசலத்திலுள்ள கிங் டேவிட் ஹோட்டல்; ஹொங்கொங் ஆகிய விடங்களிலெல்லாம் கிளைகள் நிறுவப்பட்டன.

முஹம்மத் மாக்கன் மாக்கார் தனது ஆரம்பக் கல்வியைக் காலி ஆல் செயின்ட்ஸ் (ALL SAINTS) கல்லூரியிலும், பின்னர் கொழும்பு வெஸ்லிக் கல்லூரியிலும் பெற்றார். தனது எதிர்கால வாழ்வில் மருத்துவராக வர விரும்பி, அத்துறையிலான கல்வியைப் பெற்றார். ஆயினும் மருத்துவப் புகுமுகத் தேர்வில் சித்தியடையத் தவறியதன் காரணமாகக் கல்வியைக் கைவிட்டு வர்த்தகத்துறையிற் பிரவேசித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் பெறமுடியாமற் போன கல்வியைத் தம்மக்கள் பெறவேண்டுமென்பதில் அவர் அக்கறை யாயிருந்திருக்கிறார். ஏனெனில் அவரது ஆண்மக்கள் மூவரையும் ஆரம்பத்திலிருந்தே வர்த்தகத்தி லீடுபடுத்தாது கல்வியளிப்பதில் மிகுந்த அக்கறை செலுத்தினார். அதனாற்றான் அவரது ஆண்மக்கள் மூவருள் மூத்தவரான அஹமத் ஹுசைன் கேம்பிரிட்ஜ் பட்டதாரியாகவும், பரிஸ்டராகவும் கல்வி பெற்றுப் பின்னர் அரசியற் துறையிற் பிரவேசித்து கொழும்பு மாநகரசபை உறுப்பினராகவும்; கல்குடாத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராகவும் சேவை செய்தார். இரண்டாவது மகனான அலவி கேம்பிரிட்ஜ் பட்டதாரியாகவும், பட்டயக் கணக்காளராகவும் விளங்கினார்; மூன்றாமவர் அஜ்வத் மருத்துவப் பேராசிரியரானார்.

ஸேர். முஹம்மத் மாக்கன் மாக்கார் தமது அரசியல், பொதுப்பணிகளை 1906 ஆம் ஆண்டில் காலி மாநகரசபை உறுப்பினராக ஆரம்பித்தார். அவ்வாண்டி லிருந்து 1931 வரையும் அப்பதவியை வகித்துப் பின்னர் 1940லிருந்து 1943 வரை கொழும்பு மாநகரசபை உறுப்பினராகவும் கடமையாற்றினார். 1903 இலிருந்து 1915 வரை துருக்கிக் கொன்சலராகவும் இருந்தார். அகில இலங்கை முஸ்லிம் லீக் தலைவராயிருந்ததோடு, சோனகர் சங்க வளர்ச்சிக்கும் பெரிதும் உதவினார். 1906 இல் அறாபியப் பாலைவனத்தினூடே ஒட்டகைப் பயணத்தை மேற்கொண்டு ஹஜ்ஜுக்கடமையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்றியதோடு, 1909 இல் துருக்கி, ரோமாபுரி, பரிஸ், லண்டன் ஆகியவிடங்களுக்கு விஜயம் மேற்கொண்டு, ஏழாவது எட்வர்ட் மன்னரைச் சந்தித்தார். 1910 ஜுலை 24 இல் கொழும்பில் மிகவும் பிரபல்யமும், செல்வாக்கும் பெற்றிருந்த குடும்பத்தைச் சேர்ந்த நூர் நயீமா என்பவரை விவாகஞ் செய்தார்.

1924 செப்டம்பரில் மாக்கன் மாக்கார் சட்ட நிருபணசபை அங்கத்தினரானார். அச்சபையில் இலங்கை ரீதியாக முஸ்லிம்களுக்கென மூன்று ஆசனங்கள் ஒதுக்கப்பட்டன. நால்வர் போட்டியிட்டனர். அவர்கள் பெற்ற வாக்குகள் வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| எல்.எம்.மாக்கன் மாக்கார் | - | 10311 | வாக்குகள் |
| என்.எச்.எம்.அப்துல் காதர் | - | 6705 | " |
| ரி.பி.ஜாயா | - | 5221 | " |
| எம்.எல்.எம். றியால் | - | 3629 | " |

இக்காலகட்டத்திலேதான் நியமன அங்கத்தவர் முறையும், இனவாரிப் பிரதிநிதித்துவமும் நீக்கப்பட்டு, தொகுதிவாரிப் பிரதிநிதித்துவ முறையிலான அரச சபை நிறுவப்படல் வேண்டுமெனும் கோரிக்கை இந்நாட்டில் வலுப்பெற்றது. இக்கோரிக்கையின் விளைவாகவே டொனமூர் ஆணைக்குழுவினை பிரித்தானிய அரசாங்கம் இலங்கைக்கு அனுப்பியது.

அது தொடர்பாக 1928 நவம்பர் 2 ஆம் திகதி, தமது கருத்தை வெளியிடுகையில் மாக்கன் மாக்கார் பின்வருமாறு குறிப்பிட்டார்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாம் மூன்று லட்சத்துக்கு மேற்பட்ட சனத்தொகையைக் கொண்ட சமூகத்தினராவர். எங்கள் விசேட நலன்கள் எமக்குண்டு. அவை மிகப் பரந்தவையுமாகும். எமக்குப் போதிய பிரதிநிதித்துவம் இல்லாமற் போனால், நாட்டின் பொதுநலனுக்கே அது உகந்ததல்ல. நான் கைந்து வருடங்களுக்கு முன்பே முஸ்லிம்களுக்கு வாக்குரிமை கிடைத்தது. அவ்வாறு வாக்குரிமை பெற்ற மொத்த வாக்காளரான சுமார் 12000 பேரில், 10000 க்கு மேற்பட்டோர் வாக்களித்தமை பெருமைப்படக்கூடிய விடயமாகும். இது எதனைக் காட்டுகின்றது? இந்நாட்டு அலுவல்களில் முஸ்லிம்களும் கரிசனையோடு பங்கெடுக்க விரும்புவதனையே அது காட்டுகின்றது."

டொனமூர் அறிக்கையின் பிரகாரம் 1931 இல் நடைபெற்ற சட்டசபைத் தேர்தலில் மட்டக்களப்புத் தெற்குத் தொகுதியில் அவர் போட்டியிட்டார். கல்லடிப் பாலத்திலிருந்து மொனறாகலை மாவட்ட எல்லையான கும்புக்கன் ஓயா வரையான பிரதேசமே இத்தொகுதியாகும். இவரை எதிர்த்துப் போட்டியிட்டவர் அப்பிரதேசத்தில் மிகவும் பிரபல்யம் பெற்ற ஈ.ஆர். தம்பிமுத்து அவர்களாவர். மாக்கன் மாக்கார் 15145 வாக்குகளையும், தம்பிமுத்து 12508 வாக்குகளையும் பெற்று 2637 மேலதிக வாக்குகளால் ஸேர். மாக்கன் மாக்கார் வெற்றியீட்டினார். அச்சபையில் போக்குவரத்து, மராமத்து அமைச்சராகவும் நியமிக்கப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் சோல்பரி ஆணைக்குழுவின் விதந்துரைப்பின் பிரகாரம் நிறுவப்பட்ட மூதவைக்கு 1947 இல் அங்கத்தினராக நியமிக்கப்பட்டு, 1952 மே 10 ஆம் திகதி அவர் காலமாகும்வரை அச்சபையிற் கடமையாற்றினார்.

1938 இல் பிரித்தானிய அரசாங்கம் 'ஸேர்' பட்டம் அளித்து இவரைக்கௌரவித்தது. இதனையொட்டிக் காலியில் மகத்தான வரவேற்பொன்று அளிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து கல்முனையிலும் சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டது. டாக்டர். எம். ஒஸ்மன் என்பார் தலைமையில், கல்முனைக் கிராம நீதிமன்ற முன்றலில் நடைபெற்ற இவ்விழாவில் புலவர் எம். அஹ்மத் அழகிய வரவேற்புப் பா பாடினார். கேட் முதலியார் எம். எஸ். காரியப்பர் உட்படப் பலர் வாழ்த்துரை வழங்கினர்.

ஸேர். முஹம்மத் மாக்கன் மாக்கார் இந்நாட்டு முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சியிலும் மிகவும் அக்கறை செலுத்தினார். காலி கோட்டையிலுள்ள பஹ்ஜத்துல் இப்றாஹீமிய்யா அறபுக் கல்லூரி இவரது தாயாரால் நிறுவப்பட்டது. அதன் இடையறா வளர்ச்சிக்கான அறக்கொடைகளை இவர் மேலும் வலுப்படுத்தினார். இவரது இளைய சகோதரர் சாலிஹ் மாக்கன் மாக்காரால் ஆரம்பிக்கப்பட்ட புலமைப்பரிசில் நிதியத்தை மேலும் விரிவாக்கினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு ஸாஹிராக் கல்லூரிக்கு நிதியுதவி செய்தார்; 1919 இல் நீதியரசர் எம்.ரி. அக்பர் போன்றோருடன் இணைந்து இலங்கை முஸ்லிம் கல்விக் கழகத்தை நிறுவ உதவினார். கொழும்பு ஹுஸைனியா, பாத்திமாப் பாடசாலைகளின் நிர்வாகத்தை இக்கல்விக் கழகமே செய்தது. 1943 இல் இருந்து இலங்கைப் பல்கலைக்கழகக் கவுன்சில் அங்கத்தினராயிருந்ததோடு, பேராதனைப் பல்கலைக்கழகப் பள்ளிவாசல் கட்டிட நிதிக்கும் ஐம்பதினாயிரம் (50000/=) ரூபா அன்பளிப்புச் செய்தார்.

இவ்வாறான சேவைகளின் மூலம் இந்நாட்டு முஸ்லிம்களின் சிறப்புக்கும், வளத்துக்கும் உரமூட்டிய ஒரு தலைவராக ஸேர். முஹம்மத் மாக்கன் மாக்கார் திகழ்கிறார்.

இவர் காலமானபின் ஏற்படுத்தப்பட்ட மாக்கன் மாக்கார் நிதியம் கல்விக்கான பேருதவிகளை இன்றும் புரிந்து வருகிறது.

1990 மே 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலாநிதி அல்ஹாஜ் ரி.பி. ஜாயா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Aliyar Muzz-zamm
"RIMZIYA MAHAL"
546A, 1st CROSS STREET
SAINTHAMARUTHU-16
SHRI LANKA

# கலாநிதி அல்ஹாஜ் ரி. பி. ஜாயா

*1914*ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் ஒருநாள், கொழும்பில் அப்போது மிகவும் உற்சாகமாக இயங்கிக் கொண்டிருந்த இலங்கை முஸ்லிம் சங்கத்தின் கூட்டத்தில் "கல்வியும் தேசிய முன்னேற்றமும்" எனும் தலைப்பில் ரி. பி. ஜாயா உரை ஒன்று நிகழ்த்தினார்.

அவ்வுரையிலே முஸ்லிம்கள் கல்வித்துறையில் மிகவும் பின்தங்கியிருந்த நிலையைச் சுட்டிக் காட்டி, இந்தியாவில் அலிகார் இயக்கத்தின் மூலம் ஸேர். செய்யத் அஹமது கான், கல்வி மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது போன்று இந்நாட்டு முஸ்லிம்களின் கல்வி முன்னேற்றத்திற்குப் பாடுபட்டு இலங்கையின் செய்யத் அஹமது கான் ஆகப்போகிறவர் யார் எனும் வினாவையும் எழுப்பினார். பிற்காலத்தில் இத்தகுதியுடையோராகக் கணிக்கப்படப்போகிறவர் அவரேயென்பதை அன்று அவர் உணர்ந்திருக்க முடியாது.

ரி. பி. ஜாயா கண்டி மாவட்டத்திலுள்ள கலகெதர எனும் இடத்தில் 1890ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் திகதி பிறந்தார். கலகெதரயிலும், குருணாகலையிலும், கொழும்பிலும் தனது மார்க்கக் கல்வியைப் பெற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்; ஆரம்பக்கல்வியை கொட்டாஞ்சேனை எஸ். பி. ஜி. பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை கொழும்பு புனித தொமஸ் கல்லூரியிலும் பெற்றார். புனித தொமஸ் கல்லூரியிற் கற்கும் காலத்தில் சிறப்பான மாணவராகத் திகழ்ந்து பல பரிசுகளையும் பெற்றுள்ளார். கனிஷ்ட பிரிவு கணிதத்திற்கான ஏ. ஸீ. மென்டிஸ் பரிசு; லத்தினுக்கான டாக்டர் ஈபெல் பரிசு; இலக்கியத்திற்கான கிறிஸ்தோபர் ஒபயசேகரா பரிசு; வகுப்பில் முதல் மாணவனுக்கான பரிசு என்பன அவற்றுள் சிலவாகும்.

1910ஆம் ஆண்டில் அவரது எதிர்கால வாழ்வையும், சேவையையும், புகழையும் நிர்ணயித்த ஆசிரியத் தொழிலில் இறங்கினார். முதலில் கண்டி தர்மராஜக் கல்லூரியிலும், அதனைத் தொடர்ந்து மொரட்டுவ பிறின்ஸ் ஒவ் வேல்ஸ் கல்லூரியிலும், அதன் பின்னர் கொழும்பு ஆனந்தாக் கல்லூரியிலும் ஆசிரியராகக் கடமையாற்றினார். இக்கால கட்டத்திலேயே சட்டக் கல்வியைப் பெறவிரும்பி அதனைக் கற்க ஆரம்பித் தாராயினும் அத்துறையை இடை நிறுத்திவிட்டு, சுய மாகக் கற்றே லண்டன் கலைமாணிப்பட்டப் பரீட்சையிற் சித்தியடைந்தார்.

கல்வியிற் பின்னடைந்தும், கலாசாரத்தில் தனி மைப்படுத்தப்பட்டும், அரசியலில் ஒதுங்கியுமிருந்த முஸ்லிம்கள் முன்னேறுவதற்குத் தன்னாலான பங் கினைச் செலுத்த வேண்டுமென்ற ஜாயாவின் இலட்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியத்தை நிறைவேற்றுவதற்குப் பொருத்தமான களம் 1921ஆம் ஆண்டில் கொழும்பு ஸாஹிராக் கல்லூரிக்கு அதிபரானதன் மூலம் அவருக்குக் கிடைத்தது. அன்றிலிருந்து 27 வருடங்கள் தொடர்ச்சியாய் அதிபராய் இருந்ததன் மூலம் 20ஆம் நூற்றாண்டின் முதற் பாதிக் காலப்பரப்பில் முஸ்லிம் கல்வியினதும் சமூக மறுமலர்ச்சியினதும் முக்கிய மூலகர்த்தா ஜாயாவே எனக் கொள்ளலாம்.

ஜாயாவின் கல்விக் கொள்கைகளை, ஆரம்பக் கட்டத்தில் தாய்மொழிக் கல்விக்குத் தலையாய இடமளித்தல்; பொதுக் கல்வித் திட்டத்தில் ஆங்கிலக்கல்விக்கு முக்கிய இடமளித்தல்; சமயச் சூழலில் கற்றல் ; பெண் கல்வி அதற்குரிய இடத்தைப் பெறல் என்பனவற்றின் அடிப்படையில் வகுத்து நோக்கலாம். அக்கொள்கைகளுள் பெரும்பாலானவற்றைச் சமுதாய முன்னேற்றத்தையே ஒரே இலக்காகக் கொண்டு நடைமுறைப்படுத்தும் வாய்ப்பினை கொழும்பு ஸாஹிரா அவருக்கு அளித்தது. நாடு முழுவதிலுமுள்ள முஸ்லிம்களின் மத்திய கல்வி நிலையமாக ஸாஹிரா மாறியது. மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் தொகை வெகுவாக அதிகரித்தது; கட்டிடங்களின் எண்ணிக்கை கூடியது; றக்பி, குத்துச்சண்டை, கிரிக்கட் போன்ற விளையாட்டுத்துறைகளிலும், இலக்கிய முயற்சிகளிலும் ஸாஹிரா மிளிர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகளில் அனுமதி பெற்று முறையான கல்வியைப் பெறமுடியாத மாணவர்களும் தமக்குரிய கல்வியைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பளிக்கு முகமாக மாலைநேர, இரவுப்பாடசாலைகளும் அங்கு ஆரம்பிக் கப்பட்டன.

1930களில் ஏற்பட்ட பொருளாதார மந்தத்தையும், 1940களில் ஏற்பட்ட இரண்டாம் உலகப்போர் ஏற் படுத்திய நெருக்கடி நிலைமைகளையும் கூட ஜாயா முஸ்லிம் கல்வியை முன்னேற்றுவதற்குச் சாதகமாகப் பயன் படுத்திக் கொண்டார். யுத்த நடவடிக்கை களுக்காகக் கொழும்பிலுள்ள கட்டிடங்கள் தேவைப் பட்டதனாலும், தலைநகரில் வாழ்ந்த மக்கள் மாகா ணங்களுக்கு இடம்பெயர்ந்ததனாலும் ஏற்பட்ட சூழ் நிலைகளைப் பயன்படுத்தி கம்பளை, அளுத்கமை, மாத்தளை, புத்தளம் ஆகியவிடங்களில் ஸாஹிராவின் கிளைகளை நிறுவுவதில் முன்னின்று உழைத்தார். அவ்வாறு நிறுவப்பட்ட இப்பாடசாலைகள் காலக் கிரமத்தில் தனித்துவ நிலையடைந்து இன்று இந்நாட்டின் சிறந்த கல்லூரிகளாகத் திகழ்கின்றன.

1924இல் ரி. பி. ஜாயா சட்டநிரூபணசபை அங்கத்த வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன் அரசியல் மூலமான அவரது சேவை வியாபித்துப் பரந்தது. நாடளாவிய ரீதியிலான முஸ்லிம் தொகுதிக்கெனத் தெரிவு செய்யப்பட்ட மூவருள் ஒருவராகச் சட்டநிரூபணச் சபையுள் அவர் பிரவேசித்தார். அவரது சுமார் 40


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருட கால அரசியல் வாழ்வில் சட்டநிரூபண சபை அங்கத்தினராகவும், அதனைத் தொடர்ந்து சட்டசபை அங்கத்தினராகவும், பின்னர் சனப்பிரதிநிதிகள் சபை அங்கத்தினராகவும் பணியாற்றும் பாக்கியம் அவருக்குக் கிடைத்தது.

அகில இலங்கை முஸ்லிம் லீக் தலைவராக இந்நாட்டு முஸ்லிம்களின் நலன்களைப் பாதுகாப்பதில் மிகவும் கருத்தாக இருந்தார். அதேவேளை இலங்கைத் தேசிய காங்கிரஸ் மூலம் இந்நாட்டின் தேசியத் தலைவர்களோடிணைந்து முழுநாட்டினதும் சுதந்திரப் போராட்டத்திலும் பங்கு கொண்டுழைத்துத் தனது சமூகத்தினதும் பூரண பங்களிப்பைச் செலுத்தியதனால் அவரும் ஒரு தேசியத் தலைவரின் அந்தஸ்துக்கு உயர்ந்தமை முஸ்லிம்கள் அனைவரும் பெருமைப்படும் விடயமாகும்.

ஒருமுறை எஸ். டப்ளியு. ஆர். டி. பண்டாரநாயக்கா ஜாயாவைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டார்: "இந்நாட்டு மக்களில் பலதரப் பட்டோரிடையே தாராள நோக்கின் மூலம் ஒற்றுமையைக் கொண்டு வர அங்கத்தவர் எவராலாவது முடிந்ததென்றால், அதுவும் தம் இனத்தவர் இழப்பிற்கு ஆளாகுவர் எனும் நிலையிலும் அவ்வாறு செய்ததென்றால் அதற்கான புகழ் எம் எல்லோரையும் விட எம்மிடையேயுள்ள ஜாயா அவர்களையே சென்றடைய வேண்டும். அவர் இன்று ஆற்றிய உரை இந்நாட்டு மக்களிடையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றுமையையும் போராட்டத்திற்கு நிதர்சனமான தன்மையையும் கொண்டு வருவதில் பாரிய அநுகூலத்தை ஏற்படுத்தும்."

1936இல் இருந்து 1947 வரை சட்டசபையின் கல்விக்குழு உறுப்பினராகவும்; சுதந்திரத்தின் பின்னான முதலாவது பாராளுமன்றத்தின் தொழில், சமூகசேவை அமைச்சராகவும் அவர் ஆற்றிய சேவை நாடறிந்ததாகும்.

1950இல் இருந்து பாகிஸ்தானுக்கான இலங்கையின் முதலாவது தூதுவராக சுமார் 7 வருடங்கள் அங்கு கடமையாற்றிய காலத்தில் பாகிஸ்தான் அரசும் மக்களும் இவரைப் பெரிதும் மதித்தனர். அதனாற்றான் 1951 டிசம்பர் 22 இல் பஞ்சாப் பல்கலைக்கழகம் கலாநிதிப் பட்டத்தை அவருக்கு வழங்கிக் கௌரவித்தது.

அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் இன்றையத் தலைவர் தேசமான்ய டொக்டர் எம். சி. எம். கலீல் கூறியிருப்பது போன்று: "ஜாயா இளமைப் பிராயத்திலேயே தமது உரைகளினாலும் செயல்களினாலும் சகலரும் எமது மக்களுக்கும் நாட்டுக்கும் நல்லதைச் செய்யக் கிளர்ந்து எழ வேண்டுமெனும் எண்ணத்தை எல்லோர் மனதிலும் ஊட்டினார்."

கலாநிதி அல்ஹாஜ். ஜாயாவின் கல்விப் பணிகளை, அரசியற் சேவைகளை, சமுதாய உதவிகளை அல்லாஹ் அங்கீகரித்து ஏற்றுக் கொண்டான் எனும் வகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அவரது இறுதி யாத்திரை அமைந்தது. கோடியில் ஒருவருக்குக் கிடைக்கும் பாக்கியம் அவருக்குக் கிடைத்தது. ஹஜ்ஜுக்காக இலங்கையிலிருந்து செல்லும் ஹஜ்ஜாஜிகள் மக்காவில் தங்குவதற்கான நிரந்தர இருப்பிட வசதிகளை ஏற்படுத்துமுகமாகப் புனித மக்காவில் தமது அலுவல்களையும், தனது மூன்றாவது ஹஜ்ஜையும் முடித்துக் கொண்டு புனித மதீனாவில் தங்கியிருந்த வேளை, 1960 மே 31இல் காலமானார். பூரண அரச மரியாதைகளுடன் ஜன்னத்துல் பக்கியில் நல்லடக்கம் செய்யப்பட்டார்.

ஓர் ஆத்மீகத் தூய்மையாளனது சேவையின் அங்கீகாரம் கிடைத்தற்கரிய முறையில் கலாநிதி அல்ஹாஜ். ஜாயா அவர்களுக்கு அல்லாஹ்தஆலா வினால் வழங்கப்பட்டுவிட்டது.

1992 மே 31



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலாநிதி அல்ஹாஜ் எ. எம். எ. அஸீஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாநிதி அல்ஹாஜ் எ.எம்.எ.அஸீஸ்

கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில் 1958 ஆம் ஆண்டு நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட மர்ஹூம் கலாநிதி ரி.பி.ஜாயா பேசும்போது பின்வருமாறு குறிப்பிட்டார்:

"எனக்குப் பின்னர் ஸாஹிராக் கல்லூரியைப் பொறுப்பேற்க ஒருவரைத் தேடிக் கொண்டிருந்தேன். அவரது கையிலே ஸாஹிராவின் எதிர்காலம் பத்திரமாயிருக்கவேண்டும். அவரது வழிகாட்டலில் ஸாஹிராவின் எதிர்காலம் எல்லையற்றதாயிருக்க வேண்டும். நாட்டிலேற்படும் கல்வி மாற்றங்களுக்கும், இலவசக் கல்வி முறையினால் அதிகரித்து வரும் மாணவர் தொகைக்கும் ஈடுகொடுக்கக் கூடியவராய் இருக்க வேண்டும். இதுவொரு இலேசான காரியமல்ல. கல்வி நிபுணத்துவம், நிர்வாக அநுபவம், முஸ்லிம் சமுகத்தின் எதிர்கால முன்னேற்றத்தில் நம்பிக்கை, அபரிமிதமான சேவை ஆர்வம் - இவ்வாறான குணங்களை அவர் பெற்றிருத்தல் வேண்டும். இலங்கை சிவில் சேவையில் மிகப் பெரிய எதிர்காலத்தைக் கொண்டிருந்த எ.எம்.எ. அஸீஸ் அவர்களை, அச்சேவையை விடுத்துத் தேசசேவையில் ஈடுபடுத்த நான் அயராது முயன்றேன். அதில் வெற்றியும் பெற்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர் எனும் தனது செல்வாக்கைப் பதிய வைப்பதற்கு அஸீஸ் அவர்களுக்கு அதிக காலம் பிடிக்கவில்லை. மிகச் சிறந்த முறையில் தனது கடமைகளைச் செய்து வருகிறார். கடந்த ஒன்பது வருடங்களுள், கல்லூரியை மிக உச்சநிலையில் வைத்திருப்பதோடு, இந்நாட்டுக் கல்விமான்களிடையே, கல்லூரிக்கு மிகச் சிறந்த அந்தஸ்தையும் பெற்றிருக்கிறார்."

27 வருடங்கள் ஸாஹிராவின் அதிபராகக் கடமையாற்றிய ஜாயா அவர்களே மேற்கூறியவாறு தமது வாரிசைப் புகழ்ந்து பூரண திருப்தி காணுமளவிற்கு மர்ஹூம் அஸீஸ் அவர்களின் ஸாஹிரா சகாப்தம் அமைந்திருந்தது. 1948 ஆம் ஆண்டிலிருந்து 1961 ஆம் ஆண்டு வரை 13 வருடங்கள் அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் அஸீஸ் உற்பத்தி செய்துவிட்ட எண்ணற்ற கல்விமான்கள், உயரதிகாரிகள், சிறப்புமிக்க வர்த்தகர்கள் இன்று நாடெங்கிலும் புகழ்பெற வாழ்வதோடு, பிறநாடுகளிலும் சிறப்புற வாழ்கின்றனர். முஸ்லிம் அல்லாத பலருங்கூட இவர்களுள் அடங்குவது மேலுமொரு சிறப்பம்சமாகும்.

எ.எம்.எ. அஸீஸ் அவர்கள் 1911 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 4 ஆந் திகதி யாழ்ப்பாணத்தில் பிறந்தார். தந்தை அபூபக்கர் புகழ் பெற்ற சட்டத்தரணி; காஸி; யாழ்ப்பாண நகரசபை உபதலைவர். 1946 ஆம் ஆண்டு அகில இலங்கை முஸ்லிம் லீக் தலைவராக அவர் நியமிக்கப்பட்டார். இவ்வியக்கத்தின் தலைவராக கொழும்புக்கு வெளியே ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டது இதுவே முதற் தடவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது ஆரம்பக் கல்வியை வைத்தீஸ்வர வித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியை யாழ். இந்துக் கல்லூரியிலும், பட்டக்கல்வியை இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியிலும், சிறிது காலம் இங்கிலாந்து கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திலும் பெற்றார். பல்கலைக்கழகக்கல்லூரியிலிருந்து புலமைப் பரிசில் பெற்றுக் கேம்பிரிட்ஜ் சென்றாராயினும், இலங்கை சிவில் சேவைப் பரீட்சையில் சித்தியடைந்ததன் காரணமாக, இடைநடுவில் நாடுதிரும்பினார். இந்நாட்டில் சிவில் சேவைப் பரீட்சையில் சித்தியடைந்த முதல் முஸ்லிம் எனும் புகழை அஸீஸ் பெற்றார்.

அஸீஸின் பிறப்பு, வளர்ப்புச் சூழ்நிலையும், கல்வி பெற்ற இடங்களின் செல்வாக்குமே அவரது உயர் பண்பையும், அறிவையும், நேர்மையுடன் கூடிய பரந்த மனப்பான்மையையும் அவருக்களித்த முக்கிய காரணிகள் எனலாம்.

1935 இலிருந்து 1948 வரை சிவில் சேவையிற் பல்வேறு இடங்களில், வெவ்வேறு பதவிகளிற் கடமையாற்றிய அஸீஸ் அவர்களின் வாழ்க்கையில் சமுதாய உணர்வையும், சேவை மனப்பான்மையையும் அவருக்கு மிக உணர்த்திய காலகட்டத்தைப்பற்றி அவரே கூறியிருக்கிறார். இரண்டாவது உலகப்போர் காலத்தில், அவசரகால உதவி அரசாங்க அதிபராகக் கல்முனையில் கடமையாற்றிய காலத்திலேயே, இந்நாட்டு முஸ்லிம்கள் கல்வி பெற வேண்டிய அவசரமான அவசியத்தையும், அக்கல்வித் துறையில் பணவசதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைந்த, புத்திசாலி மாணவர்களை ஈடுபடுத்து வதற்கான நிதி நிறுவனமொன்றை ஏற்படுத்துவதற்கான தேவையையும் அறிந்து அத்துறைகளில் தமது சேவை முழுவதையுமே ஈடுபடுத்தும் மனோவலிமை அவருக்கு ஏற்பட்டது.

1949 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி, அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் முஸ்லிம் கல்வி மகாநாடு கல்முனையில் நடைபெற்ற போது, அதற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் அவர் பின்வருமாறு குறிப்பிட்டார்:

"எனது உதவி அரசாங்க அதிபர் பதவி கல்முனை மக்களோடு என்னை மிக நெருக்கமாகப் பிணைக்க உதவியது. கல்வியின் முக்கிய தேவையை நான் இங்கு தான் உணர்ந்தேன். எல்லா முன்னேற்றப்பாதைகளினதும் வாசல்களைத் திறந்து விடக்கூடியது கல்வி மட்டுமே. முஸ்லிம்களின் எந்தச் சமுதாய முன்னேற்ற நடவடிக்கைகளிலும் கல்விக்கே அதி முக்கிய இடம் அளிக்கப்படல் வேண்டும். முஸ்லிம் கல்வியில் எனது நாட்டம் இங்கு தான் ஆரம்பித்தது", என அவரே கல்முனையைப் பற்றிக் கூறியிருக்கிறார். அக்கல்முனையைச் சேர்ந்த, அவரது மாணாக்கனாக வளர்ந்து, இன்று அதே கல்விப்பணியிலீடுபட்டுள்ள ஒருவருக்கு இவ்வுரையை நிகழ்த்தச் சந்தர்ப்பம் அஸீஸ் நினைவுக் குழுவினர் அளித்தது மிகப் பொருத்தமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர் சமுதாயத்தின் எழுச்சியிலும், வளர்ச்சியிலும் அஸீஸ் அவர்கள் கொண்டிருந்த அக்கறையின் நிரந்தரச் சின்னங்களாக இரண்டு அமைப்புக்கள் விளங்குகின்றன: ஒன்று, அகில இலங்கை வை.எம்.எம்.ஏ இயக்கம்; அடுத்தது முஸ்லிம் கல்விச் சகாய நிதி. மிகச் சிறந்த புத்திசாலி மாணவர் பலர், பணவசதியற்ற காரணத்தினால் தமது உயர்கல்வியைத் தொடர முடியாது இடைநடுவில் நிறுத்திவிடும் அவலநிலையை அஸீஸ் கண்ணுற்றார். தனது அரச சேவையின் பதின்மூன்றாண்டு காலத்தில், நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் இந்நிலையிருப்பதைக் கண்ணுற்றார். இந்நிலையை நீக்குவதற்கான ஒரேயொரு வழி அம்மாணவருக்குப் பணவசதியளிப்பதற்கான நிறுவனமொன்றை ஏற்படுத்துவதாகும். இத்துறையில் ஆர்வத்துடன் ஈடுபட்டு, இன்னும் பலரது ஆலோசனைகளையும், நிதியுதவியையும் பெற்று 1945 மே 19 இல் முஸ்லிம் கல்விச் சகாய நிதியை நிறுவினார். அவரது சொந்த இல்லமே பல வருடங்கள் இந்நிறுவனத்தின் தலைமையகமாகவும் இயங்கியது. இந்நிதியுதவி மூலம் நிர்வாகசேவை அலுவலர், பட்டதாரிகள், கணக்காளர், மருத்துவர், சட்டத்தரணிகள் பலர் உருவாகும் வாய்ப்பு ஏற்பட்டது.

இளைய தலைமுறைக்கான அடுத்த அமைப்பு வை.எம்.எம்.ஏ. இயக்கமாகும். இன்று நாட்டின் சகல பகுதிகளிலும் நூற்றுக்குமேற்பட்ட கிளைகளைக் கொண்டு அரசியல் கலப்பற்ற சமூகசேவை ஸ்தாபன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக இயங்கிவரும் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவை 1950 ஏப்ரலில் அஸீஸ் அவர்களாலேயே அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இஸ்லாமிய வழிமுறையில் வளர்ந்து, நாட்டிற்கும், சமூகத்திற்கும் தொண்டாற்றும் இளைஞரை உருவாக்கல்; இஸ்லாமியப் பாரம்பரியத்தையும், கலாசாரத்தையும் பரப்பல்; மேலைத் தேய - கீழைத்தேய நாகரீகங்களிலுள்ள நல்லவற்றை இஸ்லாமிய வழியில் இணைத்தல்; கல்வி வளர்ச்சி; இன ஒற்றுமை - இவையே வை.எம்.எம்.ஏ.யின் கோட்பாடுகளாக அமைய வேண்டுமென அவர் ஆசை கொண்டார். அப்பணிகளை இவ்வியக்கம் இன்று நிறைவேற்றி வருகின்றது.

அஸீஸ் அவர்களின் இவ்வியாபித்த நோக்கங்களுக்கு, அவரை ஆட்கொண்ட சிந்தனையாளர்களின் செல்வாக்குகளும் காரணமாகும். ஜமாலுத்தீன் அப்கானி ஸேர். செய்யத் அஹமதுக்கான், முஹம்மத் அப்து, அல்லாமா முஹம்மது இக்பால் ஆகியோரின் கருத்துக்களை அவர் நேசித்தார்; அதிலும் அல்லாமா முஹம்மது இக்பாலை மிகவும் நேசித்தார்; இக்பாலின் தத்துவங்களை இந்நாட்டில் அறிமுகப்படுத்தியவர் அவரே எனக்கொள்ளலாம். "கவிஞர் இக்பால் எமது நூற்றாண்டுக்குரியவர்; அவரது தூது எமது காலத்திற்கானதாகும். முரண்படும் கோட்பாடுகளும் ஆக்கிரமித்திடும் நாத்தீகமும் மலிந்துவிட்ட இக்கால கட்டத்தில் இக்பாலே எமது வழிகாட்டியும், தத்துவஞானியும், நண்பருமாவார்." என அவர் கூறியுள்ளார். கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸாஹிராக் கல்லூரியில் இக்பால் சங்கம் அமைத்து இக்பாலைப் பற்றிச் சில நூல்களை வெளியிட்டதோடு, கட்டுரைகள், பேச்சுக்கள், கருத்தரங்குகள் என்பன மூலம் இக்பாலைப் பிரபலப்படுத்தினார். புதிய கட்டிடமொன்றுக்கும் "இக்பால் மண்டபம்" எனப் பெயரிட்டார்.

அஸீஸ் அவர்களது பரந்த வெளிநாட்டுப் பிரயாணங்கள் அவரது சிந்தனைகளையும், நோக்குகளையும் மேலும் விரிவடையச் செய்தன. ஐரோப்பா, அமெரிக்கா, கிழக்காபிரிக்கா, அரபு நாடுகள், மலேசியா, இந்தியா, பாகிஸ்தான் என்பவ்னவற்றில் பரந்தளவில் பிரயாணம் செய்திருக்கிறார். அந்நாடுகளில் கௌரவிக்கப்பட்டிருக்கிறார். குறிப்பாக, 1953 செப்டம்பரில் சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு முஸ்லிம் கல்வி மகாநாட்டை அங்குரார்ப்பணம் செய்யுங் கௌரவம் அவருக்கு அளிக்கப்பட்டதோடு, அங்கு பொன்னாடை போர்த்தியும் கௌரவிக்கப்பட்டார்.

தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் மிகச் சிறந்த பேச்சாளரும், கட்டுரையாளருமாகத் திகழ்ந்த அஸீஸ் அவர்கள் இலங்கையிலேயே மிகச் சிறந்த நூலகங்களுள் ஒன்று எனக் கூறக்கூடிய நூலகமொன்றைத் தமது இல்லத்தில் வைத்திருந்தார். இலங்கையில் இஸ்லாம், மிஸ்ரின் வசியம், கிழக்காபிரிக்கக் காட்சிகள், தமிழ் யாத்திரை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிபெயர்ப்புக்கலை, The West Reappraised, அறபுத் தமிழ் எங்கள் அன்புத் தமிழ் என்பன அவரது நூல்களாகும்.

அகில இலங்கை ஆசிரிய சங்கத் தலைவர்; செனட்டர்; பொதுச் சேவை ஆணைக்குழு உறுப்பினர்; இலங்கை உயர் பாடசாலை அதிபர்கள் சங்கத் தலைவர்; இலங்கைப் பல்கலைக்கழகப்பேரவை அங்கத்தவர் எனும் பதவிகளையும் வகித்த அஸீஸ் அவர்கள், முஸ்லிம் கலாச்சார நிலைய ஸ்தாபகருமாவார். 1958 மார்ச் 18 இல் கொழும்பு ஸாஹிராக் கல்லூரி வளவினுள் ஆரம்பிக்கப்பட்ட இந்நிலையம் நூலகம், பதிப்பகம், சுவடிக் கூடம், கண்காட்சி நிலையம், கூட்ட மண்டபம், ஆராய்ச்சி நிலையம் என்பவற்றை உள்ளடக்க வேண்டுமென்பது அவரது அபிலாஷையாயிருந்தது.

முஸ்லிம் சமூகத்தின் மறுமலர்ச்சி புதிய உலமாக்களை உருவாக்குவதிலும், பள்ளிவாயல்களும், மத்ரஸாக்களும் பலம்பெறுவதிலுமே தங்கியிருக்கிறது என்பதில் அவர் மிக நம்பிக்கை கொண்டிருந்தார். இந்நம்பிக்கையின் விளைவாகவே தனது இறுதிக் காலத்தை ஜாமியா நளீமியாவை உருவாக்க உதவுவதிற் செலவிட்டார். அந்நிறுவனத்தின் பிரதம ஆலோசகராகச் செயற்பட்டார்.

1973 நவம்பர் 24 ஆம் திகதி காலமான அஸீஸ் அவர்கள் இந்நாட்டின் எல்லாச் சமூகத்தினாலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிக்கப்படுபவர். கல்வித்துறையில், கலாசாரத்துறையில், இலக்கியத்துறையில், இளைஞர் முன்னேற்றத்தில், சமுதாய மறுமலர்ச்சியில் அவர் ஆற்றிய சேவைகள் என்றும் நிலைத்து நிற்கும்.

*1979 நவம்பர் 24*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A. M. A. Azeez Memorial Committee.

President :
M. A. M. HUSSAIN
Retired District Judge.

Vice Presidents:
S. L. M SHAFIE MARIKAR
Principal, Zahira College, Colombo.

M. T. A. FURKHAN
Professor of Management, Accounting and Finance, University of Sri Lanka.

ZAHIRA COLLEGE
P. O. Box 561
COLOMBO 10.
Telephone: 95062

Secretary: S. M. KAMALDEEN,
Assistant Director, Ceylon National Library Services Board, Colombo

Assistant Secretary: M. L. M. FAROOK,
Librarian, Zahira College, Colombo

Hony. Treasurer: J. M. M. RAJI
Director. Gem Bright Co.

Assistant Treasurer: CADER M. ALI
Business Executive and Company Director.

23rd October, 1979.

Mr. S.H.M. Jameel,
Zahira College,
Kalmunai.

Dear Sir,

A.M.A. Azeez Commemoration Day

I have to thank you on behalf of the A.M.A. Azeez Memorial Committee for accepting our invitation to deliver a Radio Talk on Marhoom A.M.A. Azeez on 24th November, 1979 in the Tamil Service.

I shall be grateful to you if you will kindly assist the Committee in this matter and prepare a script for 10 minutes.

Thanking you,

Yours truly,

S.M. Kamaldeen
Hony. Gen. Secretary

c.c. to Programme Organiser
Tamil Service,
S.L.B.C.,
Colombo.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் பிற வெளியீடுகள்

★ எ. எம். எ. அஸீஸ் - கல்விச் சிந்தனைகளும், பங்களிப்பும்

★ ஸேர். றாஸிக் பரீத் அவர்களின் கல்விப் பணி

★ சாய்ந்தமருது ஜும் ஆப் பள்ளிவாசல் வரலாறு

★ கல்விச் சிந்தனைகள்

பசிபிக் அச்சகம் (பி) லிமிரெட் கொழும்பு 13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org